துரும்பர் விடுதலை இயக்கம் & JEMCEN

*இணைந்து தயாரித்து வெளியிடும்*

# காணாமல் போன
# கல்லறைகள்

ஆவணப் படம்

- தமிழ்ச் சமுதாயத்தின் தொன்மையான சமூகங்களில் ஒன்று......
- தமிழர் பண்பாட்டு சடங்குகளில் தலைமையேற்று நடத்திய சமூகம்.....
- 400 ஆண்டுகளுக்கு முன்பே கிறித்தவம் தழுவிய சமூகம்......
- இச்சமூகத்தின் மொத்த எண்ணிக்கையில் 45 சதவீதம் கத்தோலிக்க கிறித்தவர்களாக வாழும் சமூகம்......
- கிறித்தவர்களாக மதம் மாறியதால் BC பட்டியலுக்கு தள்ளப்பட்டு, தமிழக அரசின் நலத் திட்டங்களை பெற முடியாத அளவிற்கு, புதிரை வண்ணார் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர முடியாமல் தவிக்கும் சமூகம்...
- சமுதாயத்தால் மிகவும் ஒடுக்கப்பட்டும், அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டும் விளிம்பு நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகம்....
- தலித்துக்குள் தலித்துகளாய், சிறுபான்மையுள்ளும் சிறுபான்மையினராய்.....
- வரலாற்றில் துரும்பர் என அறியப்படும் புதிரை வண்ணார்.

சாதி அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ள சமூகம், இவர்கள் மீது சுமத்தியிருக்கும் மனிதநேயமற்ற, இழிதொழிலாகக் கருதப்படும் சாதியச் சேவைகளை, இன்றளவும் பிற தலித்துகளுக்குச் செய்வதே இவர்களின் அவல நிலை. சாவு மற்றும் இறுதி சடங்குகளுடன் அதிகத் தொடர்புடைய இம்மக்கள், தங்கள் சொந்த கல்லறைகளிலிருந்தே அந்நியப்படுத்தப்படுவதை நாம் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? பெரும்பாலும் ஏரி, குளம், குட்டை மற்றும் இதர வகைப் புறம்போக்கு இடங்களில் இருக்கும் இவர்களின் கல்லறைகள், அனைத்து ஆதிக்க சமூகத்தினராலும் ஆக்கிரமிக்கப்படுகின்றன. சில இடங்களில் தண்ணீர் தேங்கியுள்ள ஏரிப் பகுதிகளில், இறந்தவர்களை அடக்கம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. உதாரணங்களுக்காக, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர் மாவட்டங்களிலுள்ள பிரச்சனைகளை ஆவணப்படுத்தியுள்ளோம்.

ஒவ்வொரு சாதியினருக்கும் தனித்தனி கல்லறை, மயானம், எரிமேடை என்று இருக்கும் இச்சமுதாயத்தில், குரலற்ற புதிரை வண்ணார் சமூகத்திற்கு கல்லறைகளும், மயானங்களும் மறுக்கப்படுகிறது அல்லது ஆக்கிரமிக்கப்படுகிறது. கல்லறைகளிலும் மயானங்களிலும் தீண்டாமை இன்னும் உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

★ சமத்துவத்தை போதிக்கும் கத்தோலிக்கத் திருச்சபை, இம்மக்களை சொந்தமாக்கிக் கொள்ளவில்லை என்பதும் அவர்கள் இறந்தபின்பும் அவர்களது மனித மாண்பை நிலை நாட்டத் தவறிவிட்டது என்பதும் தான் நகைமுரண். இனியாவது திருச்சபை இவர்களை அரவணைக்க வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

★ கீழடி, ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களை தமிழ் நாகரீகம், பண்பாடு மற்றும் தொன்மையின் அடையாளங்களாக பாதுகாத்துக் கொண்டாடி வரும் தமிழ்ச் சமூகமும் அரசாங்கமும், ஆதிக்குடிகளாகிய புதிரை வண்ணார் சமூகத்தின் தொன்மையையும், வரலாற்றையும் பாதுகாக்க வேண்டும்.

★ பிற சாதியினருக்கும், மதத்தினருக்கும் சுடுகாடு, மயானம், எரிமேடை, ஆள்துளைக் கிணறு, சுற்றுச்சுவர் போன்றவற்றை அமைத்துத் தரும் தமிழக அரசு, கிறித்தவ புதிரை வண்ணார்களுக்கும் கல்லறை நிலம் ஒதுக்கி, சுற்றுச்சுவர் அல்லது வேலி அமைத்துத் தரவேண்டும் என்பதே இவ்விளிம்பு நிலை மக்களின் எதிர்பார்ப்பு.

சாதியற்ற சமுதாயத்தை அமைத்திட, சமத்துவம் விரும்பும் தங்களது மேலான ஒத்துழைப்போடு, விளிம்புநிலை துரும்பர் மக்களின் வாழ்வியல், மாற்றம் ஏற்றம் காண, ஆதரவு அளிக்குமாறு வேண்டுகிறோம்.


தொடர்புக்கு:

அமைப்பாளர், துரும்பர் விடுதலை இயக்கம்,
அப்துல் கலாம் தெரு, ஆதில் நகர், செஞ்சி – 604 202.
பேச: 9942045350, 6380767271
இமெயில்: thurumbarsliberate@gmail.com
இணையதளம்: www.thurumbar.com

இயக்குனர், JEMCEN, பேச: 9443864471


வெளியீடு ★ 11-12-2021 ★ சென்னை